2. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திருமதி என். கே. ரங்கநாயகி அவர்கள் 30-11-1994 ஆம் நாளன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி என். கே. ரங்கநாயகி அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் பவானித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும், இந்தப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).

முற்பகல் 10-05

3. வினாக்கள் விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண் 81, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

81—

சுயவேலை வாய்ப்பு செய்வோருக்கு நிதி ஒதுக்குதல்

***36553—**திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுசேமிப்பு மூலம் கிடைக்கும் நிதியை சுயவேலை வாய்ப்பு செய்வோருக்கு ஒதுக்க இயலுமா ?